# ‘ரசாயன உரங்களால் பூமி மாசுபடுகிறது’

புதுச்சேரி, மார்ச் 2-

இந்திய அறிவியல் மாநாட்டு சங்கத்தின் புதுச்சேரி கிளை (இஸ்கா) மற்றும் புதுச்சேரி அறிவியல் இயக்கம் சார்பில், தேசிய அறிவியல் தின விழா நடந்தது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின், மரபு மற்றும் பண்பாட்டு மையத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, பல்கலைக்கழக உயிர்த் தகவலியல் துறைத் தலைவர் பிரியா டேவிதர் தலைமை தாங்கினார்.

இஸ்கா அமைப்பாளர் அமுதா வரவேற்றார். புதுச்சேரி அறிவியல் இயக்க துணைத் தலைவர் பரசு ராமன் முன்னிலை வகித்தார். புதுச்சேரி அரசின் அறிவியல் தொழில்நுட்ப சுற்றுச்சூழல் துறை இயக்குனர் துவாரகநாத் வாழ்த்திப் பேசினார்.




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், இந்திய அறிவியல் மாநாட்டு சங்கம்[இஸ்கா], புதுச்சேரி அறிவியல் இயக்கம் சார்பில் நடந்த தேசிய அறிவியல் தின விழாவில், இஸ்கா அமைப்பாளர் அமுதா, பல்கலைக்கழக உயிர்த் தகவலியல் துறைத் தலைவர் பிரியா டேவிதர், சென்னை நியூ காலேஜ் பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை நியூ காலேஜ் பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில் ‘பூமியின் நன்மைக்காக’ என்ற தலைப்பில் பேசுகையில், ‘விளைநிலங்கள் எல்லாம் பிளாட் போட்டு விற்கப்படுவதால், விவசாய உற்பத்தி பாதிக்கிறது. ஆரம்ப காலத்தில் இயற்கை உரங்களைக் கொண்டு விவசாயம் செய்யப்பட்டது. தற்போது, விவசாயத்திற்கு அதிகளவில் ரசாயன உரங்கள் உபயோகிப்பதால் நிலங்கள் மாசுபடுகின்றன. சுற்றுச்சூழல் பாதிப்புகள், அதனால் ஏற்படும் நோய்கள் குறித்தும், மாணவர்களுக்கு ஆசிரியர்கள் விளக்க வேண்டும். நாம் தினம் சாப்பிடும் உணவால் பல நோய்கள் வருகின்றன. புத்தகத்திலுள்ள விஷயங்களை மட்டும் கற்றுத் தராமல், மற்ற விஷயங்களையும் கற்றுத் தர வேண்டும். ஒரு மாணவருடன், மற்ற மாணவர்களை ஒப்பிட்டு பேசக்கூடாது’ என்றார்.

நிறைவு நிகழ்ச்சியில், அறிவியல் இயக்க துணைத்தலைவர் தட்சிணாமூர்த்தி முன்னிலை வகித்தார். எழுத்தாளர் ஆயிஷா நடராஜன், ‘கணித அறிவியலின் மைல் கற்கள்’ என்ற தலைப்பில் பேசினார்.

‘அறிவியல் உருவாக்குவோம்’ போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது. பல்வேறு பள்ளிகளின் சார்பில் அறிவியல் கண்காட்சி நடந்தது. இஸ்கா பொருளாளர் சுந்தரமோகன் நன்றி கூறினார்.